මානව සම්පත් සංවර්ධනය කිරීමේ ශ්‍රී ලංකා ජාතික සභාව

இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை

NATIONAL HUMAN RESOURCES DEVELOPMENT COUNCIL OF SRI LANKA

# වාර්ෂික වාර්තාව

# ஆண்டு அறிக்கை

# ANNUAL REPORT

# 2019

ජාතික ප්‍රතිපත්ති, ආර්ථික කටයුතු, නැවත පදිංචි කිරීමේ හා පුනරුත්ථාපන, උතුරු පළාත් සංවර්ධන සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය

**Ministry of National Policies, Economic Affairs, Resettlement & Rehabilitation, Northern Province Development and Youth Affairs**

**தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றும் மற்றும் புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி, தொழிற்பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு**

354/2, නිපුණතා පියස, 7 වන මහල, ඇල්විටිගල මාවත, කොළඹ 05

354/2, 7 ஆம் மாடி, நிபுனதா பியச, எல்விட்டிகெல மாவத்தை, கொழும்பு - 05

354/2, NIPUNATHA PIYASA, 7TH FLOOR, ELVITIGALA MAWATHA, COLOMBO 05.

**இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை**

# வருடாந்த அறிக்கை
# 2019

தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றும் மற்றும் புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி, தொழிற்பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு

354/2, நிபுணதா பியச, 7ம் மாடி, எல்விட்டிகெல மாவத்தை, கொழும்பு 05.

## தொலைநோக்கு

துாரநோக்கு எங்களது எதிர்கால தொழில்படை தயார்

## நோக்கம்

அபிவிருத்தி, அமுல்படுத்தல், மேம்படுத்தல் மற்றும் பயனுள்ள கொள்கைகளை நெறிப்படுத்துவதோடு புதுமையான உத்திகளைக் கையாண்டு எமது நாட்டின் மனிதவளத்தினை அபிவிருத்தி செய்தலாகும்.

## பெறுமதிகள்

- குழுக்கலாசாரம்
- வாடிக்கையாளர் முக்கியத்துவம்
- படைப்பாற்றல்
- பாகுபாடு காட்டாமை

# நிறுவனத்தின் பின்புலம்

| | | |
|---|---|---|
| நிறுவனம் | : | இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை |
| அமைச்சு | : | தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றும் மற்றும் புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி, தொழிற்பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு |
| முகவரி | : | 354/2, 7வது மாடி, நிபுணதா பியச, எல்விடிகல மாவத்தை, நாரஹேன்பிட்டி, கொழும்பு 05 |
| மின்னஞ்சல் முகவரி | : | director.nhrdc@gmail.com |
| இணையத்தள முகவரி | : | www.nhrdc.gov.lk |
| தொலைபேசி | : | 0112595679 |
| பக்ஸ் | : | 0112595680 |
| வங்கியாளர்கள் | : | இலங்கை வங்கி<br>மக்கள் வங்கி |

## தலைவரின் செய்தி

தேசிய மனித வள அபிவிருத்திச் சபை, தனிப்பட்ட, நிறுவன ரீதியாக மற்றும் தேசிய மட்டத்தில் பயிற்சி மற்றும் ஆயட் கால கற்றல் கலாச்சராத்தை ஒருமுகப்படுத்தும் நோக்கத்துடன் பல்வேறுபட்ட அரசாங்க நிறுவனங்களின் முயற்சிகளை ஒருங்கிணைக்கின்றது.

சுபையின் முக்கிய கடமைகள் மற்றும் செயற்பாடுகளாக தேசிய மனிதவளக் கொள்கை குறித்து அமைச்சருக்கு அதன் அனைத்து அம்சங்களிலும் அறிவுறுத்துதாகும், இதில் துறைசார் மனிதவள அபிவிருத்தி பகுத்தறிவு மற்றும் ஒருங்கிணைப்பு உடபட, அல்லது வேலைவாய்ப்பு, பயிற்சி மற்றும் கல்வி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பயன்பாடு வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் பின்தங்கிய நபர்களுக்கான சமூகப் பாதுகாப்பை வடிவமைத்தரல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களுடன் உரிமைகளைப் பாதுகாத்தல் என்பன உள்ளடங்கும்.

2019 ஆம் ஆண்டிற்கான எங்கள் முதன்மை நோக்கம் ‘‘எதிர்காலத்திற்கு தயாராக உள்ள எங்கள் தொழிலாளர்’’ என்ற நிறுவனத்தின் தொலைநோக்கினை அடைவதேயாகும். இலங்கையின் தேசிய மனிதவள அபிவிருத்திச் சபை மனித வள மேம்பாட்டின் அனைத்து அம்சங்களையும் பற்றிய தகவல்களையும் கொள்கை ஆலோசனையையும் அராசங்கத்திற்கு வழங்க உறுதிபூண்டுள்ளது.

2017ஆம் ஆண்டின் தேசிய மனிதவள அபிவிருத்தி சபை அரசாங்க நிர்வாகத்துறை ஊழியர்கள், பாடசாலை அதிபர்கள், பல்கலைக்கழக நிர்வா ஊழியர்கள், மற்றும் பல்கலைக்கழக தொழில்நுட்ப அதிகாரிகள் போன்ற பல்வேறு இலக்கு குழுக்களுக்கு எட்டு வெளிநாட்டுப் பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்ய முடிந்தது. இந்த திட்டங்களின் முக்கிய நோக்கம், வேலை தொடர்பான திறன்களையும், பொதுத்துறை அதிகாரிகளின் தனிப்பட்ட வளர்ச்சியையும் அதிகரிப்பதாகும். இந்த நிகழ்ச்சிகள் பிலிப்பைன்ஸ், மலேசியா மற்றும் சிங்கப்பூர் நாடுகளின் ஒத்துழைப்புடன் நடைபெற்றது.

மேலும், நிர்வாக மட்டங்களிலும், கீழேயும் அரசு ஊழியர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காக தொடர் சொற்பொழிவுகள், அதாவது அரசு அதிகாரிகளின் செயற்திறனை மேம்படுத்துதல், அரசு ஊழியர்களின் பங்கை மாற்றுவது, மன அழுத்தமில்லாத பணியாளர் போன்றன நடாத்தப்பட்டன, இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் நோக்கம் ஒரு நெறிமுறை, உற்பத்தி மட்டும் குடிமக்களைக் கொண்ட நிர்வாகப் பணியாளர்களைக் கொண்டிருப்பதன் மூலம் பொது சேவை வழங்கலின் தரத்தை மேம்படுத்துவதாகும்.

இலங்கையில் கழிவுத்துறையில் திண்மக் கழிவு மேலாண்மை என்பது ஒரு முக்கியமான பிரச்சினையாகவுள்ளது. இந்தத் துறையில் ஈடுபட்டுள்ள தொழில்முயர்சியாளர்கள் இயலுமையை அபிவிருத்தி செய்வதற்கு உள்ளுராட்சி சபைகளுக்கான அமைச்சின் திண்மக் கழிவு

முகாமைத்துவ அலகு மற்றும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைகழகம் என்பவற்றுடன் இணைந்து இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை பாடநெறியொன்றை வடிவமைத்துள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கம் திண்மக் கழிவு முகாமைத்துவத்தின் தொழில்நுட்ப அறிவில் திறமையான திறன்களுடன் பலமான முகாமைத்துவத் திறன்களுடன் தொழில்முயற்சியாளர்களை உருவாக்குவதற்கு திண்மக் கழிவு முகாமைத்துவத்தில் ஒரு சான்றிதழ் பாடநெறியினை பெற்றுக்கொள்வதற்காக வசதியளிப்பதற்காகவாகும்.

இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையனால் கல்வி அமைச்சுடன் இணைந்து பாடசாலை முறையில் உள்ள தொழில் வழிகாட்டலை பலப்படுத்தும் நோக்கத்துடன் தொழில் வழிகாட்டல் பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட்டது.

முக்கியமான கைத்தொழில் வளர்ச்சிக்கு திறன் உள்ள மற்றும் திறனற்ற இளைஞர்களைக் கவர்வதற்காக ‘‘ரக்கியா அருண’’ நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. ஒவ்வொரு வருடமும் 47% வீதமான பாடசாலை மாணவர்கள் பொதுக் கல்வி மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி முறைகளில் இருந்து வெளியேறுகின்றனர். இவ்வாறு வெளியேறும் மாணவர்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்லுதல், முச்சக்கர வண்டிச் சாரதி போன்ற திறனற்ற தொழிற்படைகளில் இணைகின்றனர். இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை, மனித மூலதன மாநாடு, கைத்தொழில் பேரவைகள், கொள்கை அபிவிருத்தி மற்றும் தொழில் சந்தைகள் மற்றும் தொழில் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற தீர்வுகளின் ஊடாக இந்த பிரச்சினைகளை தீர்பத்தற்காக வருடாந்த கருத்திட்டங்களின் ஊடாக பல்வேறு செயற்பாடுகளை மேற்கொள்ளுகின்றது.

சிறிய மற்றும் நடுத்தர சமூகத்தை வலுவூட்டும் நோக்கத்துடன், மீனவ சமூகத்திற்கு தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது.

தேசத்தின் வெற்றிகரமான எதிர்கால பொருளாதாரத்திற்கான மனிதவள இயலுமையை கட்டியெழுப்புவதற்கான எங்கள் முயற்சிக்கு சான்றாக 2019ஆம் ஆண்டுக்கான அறிக்கை அமையும் என நான் நம்புகின்றேன்.

தினேஸ் வீரக்கொடி
தலைவர்

## பொருளடக்கம்


1. நிறுவன பின்னணி மற்றும் நோக்கம் .......... 1

2. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் நிறுவன கட்டமைப்பு .......... 4

3. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை – நிறுவன கட்டமைப்பு .......... 6

4. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் ஆளணி மற்றும் அவர்களது பதவிகள் .......... 7

5. 2019 ஆண்டில் பொது துறை பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் .......... 11

5.1 உற்பத்தித்திறன் மற்றும் ஒழுக்கநெறிமிக்க பொது வேவை கலாச்சாரத்துக்கான பொது திறன் சட்டகம் (CFW) .......... 11

5.2 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களை வலுவூட்டல் .......... 13

5.3 விரிவுரை தொடர்கள் -2019 .......... 14

5.4 திண்ம கழிவு மகாமைத்தவ தொழில்முயற்சியாளர்களை உருவாக்குதல் .......... 16

5.5 தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் புள்ளிவிபர திரட்டு .......... 17

6.2019 ஆண்டில் தனியார் துறை பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் .......... 18

6.1 பொதுத் துறை அலுவலர்களுக்கான வெளிநாட்டு பயிற்சிகள் - 2019 .......... 18

6.2 தொழிலற்ற காலத்தில் கரையோர மீனவ குடும்பங்களை வினைத்திறனாக பயன்படுத்துதல் .......... 20

6.3 பாடசாலைகளில் தொழில் வழிகாட்டலை பலப்படுத்துவதற்கான ஆற்றல் விருத்தி நிகழ்ச்சிகள் .......... 23

6.4 'ரெக்கியா அருண' தொழில் வழிகாட்டல் சந்தை மற்றும் தொழில் வழிகாட்டல் ஊக்கப்படுத்தல் நிகழ்ச்சிகள் .......... 27

6.5. பெண்களை வலுவூட்டுதல் .......... 32

7. 2019ம் ஆண்டினுள் இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் வெளியீடுகள் .......... 33

8. நிதியியல் நிலமைக் கூற்று .......... 34

9. நிதிச் செயலாற்றுகை கூற்று .......... 36

10. தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு மாற்றக்கூற்று .......... 37

11. காசுப் பாச்சல் கூற்று .......... 38

12. குறிப்புகள் .......... 40

13. குறிப்புகள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம், விளக்கக் குறிப்புகள் .......... 48

14. கணக்காய்வு வினாக்கள் மற்றும் பதில்கள் .......... 52

## 1. நிறுவன பின்னணி மற்றும் நோக்கம்

மனித வள அபிவிருத்திக்கான முக்கிய பணிப்பொறுப்பை நிறைவேற்றுவதற்காக 1987 / 18 இலக்க தேசிய மனித வள அபிவிருத்தி சபை சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை நிறுவப்பட்டது. மனித வள அபிவிருத்தி தொடர்பான கொள்கைகளை உருவாக்குதல், மேம்படுத்துதல் மற்றும் அமுல்படுத்தலுக்கு உதவுதல் மற்றும் அந்த சபைக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய மனித வள அபிவிருத்தியின் அனைத்து செயற்பாடுகளுக்கும் முன்னுரிமை வழங்குவதன் மூலம் அனைத்து பணிப்பொறுப்புகளிலும் முதன்மையான வகிபாகத்தை கொண்டுள்ளது. மனித வள அபிவிருத்தி தொடர்பான கொள்கை ரீதியான வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளை விடயத்துக்கு பொறுப்பான அமைச்சருக்கும், அரசாங்கத்துக்கும் வழங்குதல் சபையின் பிரதான நோக்கமாகும்.

### 1.1 நிறுவனத்தின் அறிமுகம்

தேசிய மட்டத்திலான ஆலோசனை சபையாக 1987 ஜூன் 05 ஆம் திகதி இளைஞர் விவகார அமைச்சின் ஒரு அலகாக இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை ஆரம்பமானது. பின்னர் அது விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் விடய பரப்பின் கீழ் 1987 / 18 இலக்க தேசிய மனித வள அபிவிருத்தி சபை சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய சுயாதீனமான நியதி சபையாக நிறுவப்பட்டது. அதிலிருந்து, அதாவது 2000 ஆண்டிலிருந்து இந்த நிறுவனம் தொழில்நுட்ப கல்வி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டது. குறுகிய காலத்தினுள் மீண்டும் 2001 ஆண்டில் அது கல்வி மற்றும் கலாச்சார விவகார அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. அதன் பின்னர், அரசாங்கம் மாற்றமடைந்த பின்னர் திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அமைச்சின் கீழ் நிறுவனம் கொண்டுவரப்பட்டது. குறுகிய காலத்தினுள் பல அமைச்சுக்களின் கீழ் செயற்பட்ட இந்த நிறுவனம் தற்போது தேசிய கொள்கைகள், பொருளாதார விவகார, மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் செயற்பட்டு வருகிறது.

### 1.2 நோக்கு

எமது ஊழியர் படையின் எதிர்காலம் தயார்

### 1.3 பணிக்கூற்று

மனித வள அபிவிருத்தியுடன் தொடர்புடைய வினைத்திறனான கொள்கைகள் மற்றும் புத்தாக்க தந்திரோபாயங்களை உருவாக்குதல், அமுல்படுத்தல், மேம்படுத்தல் மற்றும் இலகுபடுத்துதல்.

## 1.4 குறிக்கோள்

மனித வள அபிவிருத்தி தொடர்பில் கொள்கை ரீதியான வழிகாட்டல்களை அரசுக்கு வழங்குவதற்கு பொருத்தமான சட்டக கட்டமைப்பை உருவாக்குதல் இலங்கை மனித வள அபிவிருத்தி சபையின் குறிக்கோளாகும். மனித வள அபிவிருத்தி, செயன்முறைகளை திட்டமிடுதல், கொள்கை மீளாய்வு மற்றும் மனித வள ஆற்றலை அதிகரிப்பதற்கும் இந்த நிறுவனம் பொறுப்பாக இருக்கிறது.

**சபையின் கடமைகள் மற்றும் செயற்பாடுகள் பின்வருமாறானதாகும்** :

I. பின்வரும் மனித வள அபிவிருத்தி தொடர்பான தர்க்கரீதியான நியாயப்படுத்தல் மற்றும் ஒருங்கிணைப்பு அடங்கலாக அனைத்து துறைகளிலும் தேசிய மனித வள கொள்கை தொடர்பில் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்.
   a. தொழில்வாய்ப்பு, பயிற்சி மற்றும் கல்வி,
   b. விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தின் பிரயோகம்,
   c. வாழ்க்கை தரத்தை உயர்த்துதல்,
   d. பலவீனமான குழு நபர்களுக்கான சமூக பாதுகாப்பை வடிவமைத்தல்,
   e. பொருளாதார மறுசீரமைப்புடன் உரிமைகளை பேணுதல்

II. தேசிய கொள்கைக்கு ஏற்புடையதாக அரசுக்கு சமர்ப்பிப்பதற்கான மனித வள அபிவிருத்தி தொடர்பான திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் அமைச்சருக்கு விதந்துரை செய்தல்.

III. காலத்துக்கு காலம் மனித வள அபிவிருத்தி கொள்கை, அமுல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்தட்டங்களை மீளாய்வு செய்தல் மற்றும் பரிசீலித்தல், தேவையான சந்தர்ப்பங்களில் அவ்வாறான கொள்கை மாற்றங்கள், திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அமைச்சருக்கு விதந்துரை வழங்குதல்,

IV. அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மனித வள அபிவிருத்தி திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்பார்வை செய்தல், மற்றும்,

V. இந்த சட்டத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விடயம் தொடர்பிலுமான எந்தவொரு கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக, ஏனைய எந்தவொரு அமைச்சருக்கு ஒதுக்கப்பட்டுள்ள விடயத்துக்கு அவ்வாறான கருத்திட்டம் தொடர்பானதாக இருக்கும் போது, அந்த அமைச்சரின் ஒத்திசைவுடன் அமுல்படுத்தப்பட வேண்டும். மற்றும்,

VI. சபையின் கருத்துக்கு அமைய தேசிய நோக்கங்களுக்கு ஏற்புடையதாக மனித வள அபிவிருத்திக்கு தேவையான அல்லது சாதகமான அல்லது எதிர்பாராது தோன்றும் ஏனைய அனைத்து கருமங்களையும் மேற்கொள்ளுதல்.

**1.5 சபையின் அதிகாரம்**

1997 / 18 இலக்க இலங்கை தேசிய மனித அபிவிருத்தி சபை சட்டத்தின் 16 (2) (1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய சபையின் அதிகாரம் பின்வருமாறானதாகும்,

a. சபையின் கருமங்களை நிறைவேற்றுவதற்கு தேவையாக இருக்கக்கூடிய அளவீடு, புலனாய்வு கற்கைகள் மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.

b. மனித வள அபிவிருத்தியுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பில் விஷேட நிபுணர்கள், தொழில்வாண்மையாளர்கள் அல்லது சாதாரண மக்களின் கருத்தை கேட்கும் நோக்குடன் பொது அல்லது தனிப்பட்ட கலந்துரையாடல்களை நடத்துதல்.

c. இலங்கைக்கு வெளியே சர்வதேச நிறுவனங்கள் மற்றும் ஏனைய அமைப்புகளுடன் தொடர்புகளை உருவாக்குதல் மற்றும் பேணிவருதல்.

d. இந்த சட்டத்தின் கீழ் அந்த கருமங்களை நிறைவேற்றுவதற்கு தேவையாக இருக்கக்கூடிய ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகளை எட்டுவதற்கும் மேற்கொள்வதற்கும்,

e. நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் மனித வள அபிவிருத்தி தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள ஏற்பாடு செய்தல்,

f. இலங்கை மற்றும் ஏனைய நாடுகளில் மனித வள அபிவிருத்தி மற்றும் அதனுடன் தொடர்புடைய தகவல் தரவு வங்கியை நிறுவுதல் மற்றும் பேணி வருதல்,

g. ஏதாவதொரு வங்கியில் அல்லது வங்கிகளில் நடைமுறை, சேமிப்பு அல்லது வைப்பு கணக்குகளை திறத்தல் மற்றும் பேணி வருதல்.

h. அசையும் மற்றும் அசையா மானியங்கள் மற்றும் நன்கொடைகளை ஏற்றுக்கொள்ளுதல், பெற்றுக்கொள்ளுதல்.

i. மனித வள அபிவிருத்தியின் அனைத்து பிரிவுகள் தொடர்பாகவும் விஷேட நிபுணத்துவம் கொண்ட குழாத்தை விருத்தி செய்யும் நோக்குடன், அந்த அலுவலர்களின் திறன்களை விருத்தி செய்வதற்கான நடவடிக்கை எடுத்தல்.

j. அந்த கருமங்களை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கு தேவையான அவ்வாறான குழுக்கள், நிபுணத்துவ குழுக்கள் மற்றும் ஆலோசனை நிறுவனங்களை நியமித்தல்.

k. தேவையானதென சபையால் கருதப்படும் புள்ளிவிபரங்கள் மற்றும் தரவுகளை அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதி சபைகள், மாகாண சபைகள், உள்;ராட்சி நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை நிறுவனங்களிடமிருந்து கோருதல் மற்றும் பெற்றுக்கொள்ளுதல்.

l. சபையின் கருத்துக்கு அமைய, சபையின் கருமங்கள், அதிகாரங்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுதல், பிரயோகித்தல் மற்றும் செயலாற்றுகைக்கு தேவையானதென கருதப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

## 2.இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் நிறுவன கட்டமைப்பு

தேசிய கொள்கைகள், பொருளாதார விவகார, மீள் குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் விடய பரப்பின் கீழ் இயங்கிவரும் இந்த சபை 1987/18 இலக்க இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய தவிசாளர் மற்றும் இருபது உறுப்பினர்களை கொண்டதாகும். அவர்களில் பதினைந்து (15) பேர் முன்னாள் அலுவலர்களிலிருந்து நியமிக்கப்படுவார்கள் என்பவதுடன், எஞ்சிய ஐந்து (5) உறுப்பினர்களும் தொடர்புடைய நிறுவனங்களை சேர்ந்தவர்களாவர். அதற்கு மேலதிகமாக குறித்த துறைகளில் அனுபவம் மற்றும் திறமையை கருத்தில் கொண்டு 5 உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதுடன், அவர்களில் இருவர் (2) தனியார் துறையை சேர்ந்தவர்களாவர். அவர்களில் ஒரு உறுப்பினரை நிறைவேற்று தவிசாளராக நியமிக்கும் அதிகாரம் அமைச்சருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. தவிசாளர் பிரதம நிறைவேற்று அலுவலராவார். சுபை 2019.12.31 திகதியில் இருபது உறுப்பினர்களை கொண்டதாக இருந்தது. 2019.12.31 திகதியில் பணிப்பாளர் சபை பின்வருமாறானதாகும்.

**சட்டத்தின் 3 (1) (அ) தொடக்கம் (பி) வரையான பிரிவுகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள்.**

1. தவிசாளர், இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை
2. செயலாளர், திட்ட அமுலாக்கல் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு
3. செயலாளர், உயர்கல்வி விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு
4. செயலாளர், கல்வி விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு
5. செயலாளர், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ட விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு
6. செயலாளர், தொழில் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு
7. செயலாளர், பொது நிர்வாக விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு
8. செயலாளர், சுகாதார விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு
9. செயலாளர், கைத்தொழில் அபிவிருத்தி விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு
10. செயலாளர், விவசாய விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு
11. தவிசாளர், மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு
12. பணிப்பாளர் நாயகம், மூன்றாம் மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு
13. தவிசாளர், தேசிய கல்வி ஆணைக்குழு
14. தவிசாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
15. தவிசாளர், தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை
16. செயலாளர், நிதி விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு

**சட்டத்தின் 3 (2) (ஓ) பிரிவுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள்.**

1. பேராசியர். கமீனா குணரத்ன, பீடாதிபதி, மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம், திறந்த பல்கலைக்கழகம்
2. பேராசியர். ரங்கிக்க ஹல்வத்துற, சிரேஷ்ட விரிவுரையாளர், மொரட்டுவ பல்கலைக்கழகம்
3. கலாநிதி. சந்திரா எம்புல்தெனிய, 165 / 1 C, பொல்ஹேன்கொட, கொழும்பு – 05
4. திரு. உபாலி ரத்நாயக்க, 2000 பிளாஸா ரெசிடென்ஸ், 25, புதிய மருத்துவமனை வீதி, ஸ்ரீ ஜயவர்த்தனபுர, நுகேகொட

**இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் கூட்டங்கள் மற்றும் 2019 ஆண்டில் பங்குபற்றிய உறுப்பினர்கள் தொடர்பான விபரம்**

| இல | **உறுப்பினர் மற்றும் நிறுவனம்** | 2019.06.21 | 2019.07.29 | 2019.09.19 | 2019.10.29 |
|---|---|---|---|---|---|
| 01. | தவிசாளர், இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை | √ | √ | √ | √ |
| 02. | செயலாளர், திட்ட அமுலாக்கல் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு | *√ | *√ | - | - |
| 03. | செயலாளர், உயர்கல்வி விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு | - | √ | - | - |
| 04. | செயலாளர், கல்வி விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு | √ | √ | - | - |
| 05. | செயலாளர், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ட விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு | - | - | √ | √ |
| 06. | செயலாளர், தொழில் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு | - | √ | √ | √ |
| 07. | செயலாளர், பொது நிர்வாக விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு | - | - | - | - |
| 08. | செயலாளர், சுகாதார விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு | √ | √ | √ | - |
| 09. | செயலாளர், கைத்தொழில் அபிவிருத்தி விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு | - | - | - | √ |
| 10. | செயலாளர், விவசாய விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு | √ | √ | - | - |
| 11. | தவிசாளர், மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு | √ | √ | √ | √ |
| 12. | பணிப்பாளர் நாயகம், மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு | √ | √ | √ | √ |
| 13. | தவிசாளர், தேசிய கல்வி ஆணைக்குழு | √ | √ | √ | - |
| 14. | தவிசாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | - | √ | - | - |
| 15. | தவிசாளர், தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை | √ | - | - | - |
| 16. | நிதி விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு செயலாளரின் பிரதிநிதி | √ | - | √ | √ |
| 17. | பேராசியர். கமீனா குணரத்ன, (நியமன உறுப்பினர்) | - | - | - | √ |
| 18. | திரு. உபாலி ரத்நாயக்க, (நியமன உறுப்பினர்) | √ | √ | √ | √ |
| 19. | பேராசியர். ரங்கிக்கா ஹல்வத்துற, (நியமன உறுப்பினர்) | √ | √ | - | √ |
| 20. | கலாநிதி. சந்திரா எம்புல்தெனிய, (நியமன உறுப்பினர்) | √ | √ | √ | √ |
| | **பங்குபற்றியோரின் மொத்த எண்ணிக்கை** | **13** | **14** | **10** | **11** |

3. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை – நிறுவன கட்டமைப்பு



## 4. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் ஆளணி மற்றும் அவர்களது பதவிகள்

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | 31.12.2019 திகதியில் ஆளணி | 31.12.2019 திகதியில் வெற்றிடம் | பெயர் |
|---|---|---|---|---|
| தவிசாளர் | 01 | 01 | - | திரு. தினேஸ் வீரக்கொடி |
| பணிப்பாளர் | 01 | 01 | - | திரு. கே.ஏ.லலித்ததீர |
| உதவி பணிப்பாளர் | 03 | 03 | - | திருமதி. ஜே.ஏ.சி.பி.ஜயசிங்ஹ<br>திரு. எஸ். தணிகசீலன்<br>திரு. எஸ்.எஸ்.களுவாராச்சி |
| சட்ட அலுவலர்/ சபை செயலாளர் | 01 | 01 | - | திருமதி.ஜீ.ஜீ. கசுனி உத்பலா |
| ஆய்வு அலுவலர் | 04 | 04 | - | திரு. டி.செந்தில்நாதன்<br>செல்வி. என்.டி.எதிரிசிங்ஹ<br>திரு. ஆர்.டி.சி.எஸ்.ராஜபக்ஸ<br>செல்வி. யு.எம்.வீரசேன |
| நிர்வாக அலுவலர் | 01 | 01 | - | திருமதி. கே.வி.எஸ்.எரங்க |
| மொழிபெயர்ப்பாளர் | 01 | - | 01 | - |
| அபிவிருத்தி அலுவலர் | 04 | 01 | 03 | திரு. கே.பி.பி.பெரேரா |
| தவிசாளரின் பிரத்தியோக உதவியாளர் | 01 | - | 01 | - |
| முகாமைத்துவ உதவியாளர் | 08 | 06 | 02 | திரு. சி.ஆர் மாதஹே<br>திருமதி. எம்.ஜி.என்.தில்ஹாரி<br>திருமதி. கே.சி.முத்துமால<br>திருமதி. ஆ்' எதிரிசிங்ஹ<br>திருமதி. ஜி.எம்.சந்தமங்கலா<br>செல்வி. ஹிருணி சமுதி |
| சாரதி | 04 | 04 | - | திரு. ஜி.எம்.பின்னதுஸவ<br>திரு. டெரன்ஸ் பியால்<br>திரு. ஆர்.சி.ஆர்.யவர்த்தன<br>திரு. ஹயான் ஜீவந்த |
| அலுவலக உதவியாளர் | 04 | 03 | 01 | திரு என்.ஜி.நதுன் மதுரங்க<br>திரு.டபில்யூ.ஆர்.ஏ பிரின்ஸ் கிரான்வில்<br>செல்வி ஏ நயனா பிரியதர்சனி |
| **மொத்தம்** | **33** | **25** | **08** | |

**புதிய ஆட்சேர்ப்பு**

| **பெயர்** | **பதவி** | **நியமன திகதி** |
|---|---|---|
| 1. திருமதி. எஸ்.எஸ்.களுரராச்சி | உதவி பணிப்பாளர் (நிதி) | 11/02/2019 |
| 2. செல்வி. யு.எம்.வீரசேன | ஆராய்ச்சி அலுவலர் | 11/02/2019 |
| 3. திரு. ஆர்.டி.சி.எஸ்.ராஜபக்ஸ | ஆராய்ச்சி அலவலர் | 11/02/2019 |

**பதவி விலகல்கள்**

| **பெயர்** | **பதவி** | **பதவி விலகிய திகதி** |
|---|---|---|
| **1.** திருமதி. கே.எல்.எஸ்.என்.கம்புறுகமுவ | முகாமைத்துவ உதவியாளர் | 07/08/2019 |
| **2.** திருமதி. கே.சி.குருசிங்ஹ | அபிவிருத்தி அலுவலர் | 11/08/2019 |

**ஆளணியினருக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகள்**

இலங்கை தேசிய மனித அபிவிருத்தி சபை ஆளணியினரின் விடய அறிவை மேம்படுத்தும் நோக்குடன், அவர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகள் மீளாய்வு ஆண்டில் வழங்கப்பட்டன. 2019 ஆண்டில் பயிற்சிகளில் பங்குபற்றிய அலுவலர்களின் விபரம் பின்வருமாறானதாகும்.

| # | அலுவலர் பெயர் | பதவி | பயிற்சி / மாநாடு / கருத்தரங்கு | நிறுவனம் |
|---|---|---|---|---|
| | கே.சி.குருசிங்ஹ | அபிவிருத்தி அலுவலர் | ஆங்கில டிப்ளோமா | களணி பல்கலைக்கழகம் |
| | கே.ஏ.லலித்ததிர<br>கே.வி.எஸ்.எரங்ஹ | பணிப்பாளர்<br>நிர்வாக அலுவலர் | வுசயனைெபெ நேநன<br>யுயெடலளளைெ | CIPM |
| | கே.வி.எஸ்.எரங்ஹ<br>ஜி.பி.எம்.சத்தாமங்கல | நிர்வாக அலுவலர்<br>முகாமைத்துவ உதவியாளர் | ஒழுக்காற்று நடவடிக்கை | CIPM |
| | சுஜீவ களுவாராச்சி | உதவி பணிப்பாளர் (நிதி) | Workshop for Public Sector Accountants | CA Sri Lanka |
| | சுஜீவ களுவாராச்சி<br>(பங்குபற்றவில்லை) | உதவி பணிப்பாளர் (நிதி) | கணக்கீட்டு நியமங்கள் | SDFL |
| | சுஜீவ களுவாராச்சி | உதவி பணிப்பாளர் (நிதி) | Budget Forum-2019 | MBA Alumni Association-<br>கொ/ பல்கலைக்கழகம் |
| | நயனா பிரியதர்சினி | அலுவலக உதவியாளர் | தொலைபேசி கண்ணியம் மற்றும் வாடிக்கையாளர் பராமரிப்பு | ஹெட் மாஸ்டர்ஸ் |
| | பிரின்ஸ் கிரென்வில் | அலுவலக உதவியாளர் | உங்கள் நிறுவனத்தின் பெருமையாக இருங்கள் | CIPM |
| | மதுரங்க பின்னதுாவ | சாரதி | நெறிமுறை மற்றும் ஒழுக்கங்கள் | SDFL |
| | ஹிருணி சமூதி | முகாமைத்துவ உதவியாளர் | ஆங்கில பாடநெறி | பிறிற்றிஸ் கவுன்சில் |
| | .ஜீ.ஜீ.ஹசுனி உத்பலா | சட்ட அலுவலர் | கம்பனி செயலாளரின் வகிபாகம் | ICC |
| | பிரபாத் பெரேரா<br>எம்.சத்தாமங்கல | அபிவிருத்தி அலுவலர்<br>முகாமைத்துவ உதவியாளர் | உள்ளக கணக்காய்வு | SLSI |
| | சுீனிக்கா நவன்ஜினி | முகாமைத்துவ உதவியாளர் | தாக்கத்துடன் எழுதுதல் | CIPM |
| | ஹசுனி உத்பலா | சட்ட அலுவலர் | சபை தலைமைத்துவம் | SLID |
| | நவோதா எதிரிசிங்ஹ<br>சந்தீபா ராஜபக்ஸ<br>உதா வீரசிங்ஹ | ஆராய்ச்சி அலுவலர்<br>ஆராய்ச்சி அலுவலர்<br>ஆராய்ச்சி அலுவலர் | ஆராய்ச்சி சிம்பொசியம் | CIPM |
| | கே.ஏ.லலித்ததிர<br>எஸ்.ரி.சீலன் | பணிப்பாளர்<br>உதவி பணிப்பாளர் | உயர் செயலாற்றுகை தலைமைத்துவம் | SLASSCOM |
| | கே.ஏ.லலித்ததிர | பணிப்பாளர் | ஆர்ட் ஒப் லீடிங் சிப்ற் | CIMA |
| | ஹசுனி உத்பலா | சட்ட அலுவலர் | நிதி செயற்பாடு மற்றும் பொறுப்புக்கூறல் | SLID |
| | மதுபாீனி<br>சத்தாமங்கல | முகாமைத்துவ உதவியாளர் | தேசிய மனித வள மாநாடு | CIPM |
| | உதா வீரசேன<br>ஹிருணி சமூதி | ஆராய்ச்சி அலுவலர்<br>முகாமைத்துவ உதவியாளர் | பேண்தகு தேசிய அபிவிருத்தி | OPA |
| | தணிகசீலன்<br>சந்தீபா ராஜபக்ஸ | உதவி பணிப்பாளர்<br>ஆராய்ச்சி அலுவலர் | ஆராய்ச்சி முறை பயிற்சிப்பட்டறை | தந்திரோபாய கற்கைகளுக்கான பிராந்திய நிலையம் |
| | கே.ஏ.லலித்ததிர<br>நவோதா எதிரிசிங்ஹ<br>சந்தீபா ராஜபக்ஸ<br>உதா வீரசேன | பணிப்பாளர்<br>ஆராய்ச்சி அலுவலர்கள் | முகாமைத்துவ மாநாடு 2019 | CPM |
| | தணிகசீலன் | உதவி பணிப்பாளர் | பூட்டிங் முகாம் | CIPM |
| | ஜே.ஏ.சீ.பி.ஜயசிங்ஹ | உதவி பணிப்பாளர் | உணர்வுசார் நுண்ணறிவு | CIPM |
| | ஹசுனி உத்பலா | சட்ட அலுவலர் | பணிப்பாளர் மற்றும் பணிப்பாளர் சபையின் வகிபாகம் | SLID |

## குழு பயிற்சி

| பயிற்சி | வளவாளர் / நிறுவனம் | காலம் | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| பெறுகை | திரு. அனுர லொக்குகமஹே | 1 நாள் | அனைத்து ஆளணியினர் |
| முன அழுத்தமற்ற வேலைத்தளம் | திரு. பிரபாத் கருணாநாயக்க | ½ நாள் | அனைத்து ஆளணியினர |
| கூட்டு வேலைத்திட்டம் தயாரித்தல் | திரு. சமந்த ரத்நாயக்க | 1 நாள் | அனைத்து ஆளணியினர |

## வெளிநாட்டு பயிற்சி

| இல | பெயர் | பதவி | பயிற்சியின் பெயர் | நிறுவனம் |
|---|---|---|---|---|
| 1 | நவோதா எதிரிசிங்ஹ | ஆராய்ச்சி அலுவலர் | IIHS-OUM கல்வி தலைமுறை தலைவர்களை உருவாக்குதல் -2019 மலேசியா | திறந்த பல்கலைக்கழகம் மலேசியா |
| 2 | பிரபாத் பெரேரா | அபிவிருத்தி அலுவலர் | முகாமைத்துவ திறன் பயிற்சி | UPM மலேசியா |
| 3 | கே.ஏ.லலித்ததிர | பணிப்பாளர் | தோழில் வழிகாட்டல் - அனுபவத்தை பெறும் கள விஜயம் | UK - பிறிற்றிஸ் கவுன்சில் |

## 5. 2019 ஆண்டில் பொது துறை பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள்

### 5.1 உற்பத்தித்திறன் மற்றும் ஒழுக்கநெறிமிக்க பொது வேவை கலாச்சாரத்துக்கான பொது திறன் சட்டகம் (CFW)

தொடர்ச்சியாக மாற்றமடையும் சூழலில் திறமையான, அனுபவம் மிக்க முகாமையாளர்கள் தேவைப்படுகின்றனர். இலங்கை தொடர்பில் பார்க்கும் போது தனியார் துறையை விடவும் பொது துறையிலேயே சேவை வழங்கல் தங்கியுள்ளது. மக்களுக்கான அத்தியாவசிய மற்றும் கூருணர்வுமிக்க வேைவயை பொதுத் துறை வழங்கி வருகிறது. அதற்கமைய, பொது துறை அலுவலர்களின் ஆற்றல் மற்றும் திறமையை அதிகரிப்பதற்காக தேசிய மனித வள அபிவிருத்தி சபை (NHRDC) ஆய்வு நடத்தியது. தேசிய மனித வள அபிவிருத்தி சபை நிபுணர்களுடன் இணைந்து மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் பொதுத் துறைக்கான பொது திறன் சட்டகம் (CFW) தயாரிக்கப்பட்டு, அது 2017 ஜூன் 27 திகதி அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது.

இந்த பொது திறன் சட்டகத்தில் (CFW) பிரஜைகளை மையப்படுத்தல், புத்தாக்கம் மற்றும் மாற்றம் ஏற்படுத்தும் முகவர்கள், வினைத்திறனான தொடர்பாடல், குழு வேலை, தலைமைத்துவம், தந்திரோபாயம் மற்றும் முறைமைசார் சிந்தனை ஆகிய ஏழு முதன்மை திறன்கள் இனங்காணப்பட்டுள்ளன.

**பொது திறன் சட்டகத்தை (CFW) அமுல்படுத்துவதனால் எதிர்பார்க்கப்படும் விளைவுகள்**

- ஒழுக்கநெறிமிக்க, உற்பத்தித்திறன் மற்றும் பிரஜைகளை மையப்படுத்திய / மைய முகாமைத்துவ தொழிற்படையுடன் பொது சேவை வழங்கலின் தரத்தை அதிகரித்தல்.
- பொதுத்துறை ஊழியர்களின் சேவைத் தரம் மற்றும் அவர்களது திருப்தி, வாய்மை மற்றும் அர்ப்பணிப்பு உணர்வை அதிகரித்தல்.
- பொதுத் துறையின் சரியான நபர்களை கவருதல், தெரிவு செய்தல் மற்றும் தக்கவைத்தலுக்காக பொது திறன் சட்டகத்தை தயாரித்தல்.
- புதிய பொதுத் துறை கலாச்சாரத்தை உருவாக்குதல்.

ஏதிர்காலத்தில் அரச துறை பயிற்சி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இந்த சட்டகத்தை அமுல்படுத்தவதற்கான வசதிகளை வழங்குவதற்கு NHRDC எதிர்பார்க்கிறது. இந்த SLIDA சட்டகம் மற்றும் NHRDC ஆகியவற்றின் அனைத்து ஆற்றல் விருத்தி பயிற்சிகளிலும் பாவிக்கப்படுகிறது. முன்னோடி கருத்திட்டமாக அரச துறை அலுவலர்களுக்கான 03 பயிற்சிகள் நடத்தப்பட்டன. அந்த பயிற்சிகளின் சாராம்சம் கீழே காட்டப்படுகிறது. அரச துறையின் சிரேஷ்ட மற்றும் மத்திய மட்ட முகாமையாளர் அந்த பயிற்சியில் பங்குபற்றினார்கள். அந்த விரிவுரை நல்ல நிலையில் இருந்ததாக அவர்களில் 80% ஆன அலுவலர்கள் தெரிவித்தனர்.

| தலைப்பு | வளவாளரின் பெயர் | திகதி ரு இடம் | பங்குபற்றியோர் தொகை | ஒழுங்கமைப்பு செய்த நிறுவனம் |
|---|---|---|---|---|
| பிரஜைகளை மையப்படுத்தல் | பேராசிரியர். காமினி டி அல்விஸ், முகாமைத்துவ ஆலோசகர், பயிற்றுவிப்பாளர் | 2019 07.22 HARTI | 80 | NHRDC |
| பிரஜைகளை மையப்படுத்தல் | பேராசிரியர். காமினி டி அல்விஸ், முகாமைத்துவ ஆலோசகர், பயிற்றுவிப்பாளர் | 2019.11.28 பிரதேச செயலகம், மட்டக்களப்பு | 150 | NHRDC பிரதேச செயலகம், மட்டக்களப்பு |
| புத்தாக்க மற்றும் மாற்றம் ஏற்படுத்தும் முகவர் | திரு. எச்.பி.ஹேரத், திரு. ரி.எம்.ஜயசேகர, திரு. இஸ்மயில் ஏ அஸீஸ் முகாமைத்துவ ஆலோசகர், சர்வதேச அபிவிருத்தி பயிற்சி நிறுவனம். | 2019.12.12 HARTI | 70 | NHRDC |

**பிரஜைகளை மையப்படுத்தல் - HARTI**





**பிரஜைகளை மையப்படுத்தல – பிரதேச செயலகம், மட்டக்களப்பு**





**புத்தாக்க மற்றும் மாற்றம் ஏற்படுத்தும் முகவர் - HARTI**





## 5.2 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களை வலுவூட்டல்

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக சமூகத்தினரை வலுவூட்டுவதற்கான பயிற்சித் தொடர்களை தேசிய மனித வள அபிவிருத்தி சபை நடத்தியது. அதற்கமைய, பதிவு செய்யப்பட்ட மற்றும் இயங்கு நிலையிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பெண் தொழில்முயற்சியார்களின் பங்குபற்றுதலுடன், ''சர்வதேச பெண்கள் தினத்துக்கு'' இணையான தெளிவூட்டல் நிகழ்ச்சி 2019 மார்ச் 07 திகதி மு.ப 9.30 தொடக்கம் பி.ப 2.30 வரை அனுராதபுரம் சல்ஹாது மைதானத்தில் நடைபெற்றது. அந்த நிகழ்வுக்கு அனுராதபுரம் பிரதேச செயலக SME பிரிவு மற்றும் மகளிர், சிறுவர் மற்றும் உலர் வலய அபிவிருத்தி அமைச்சின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டது.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள் சர்வதேச சந்தையில் நுழைவதற்கான வசதிகளை வழங்குதனை குறிக்கோளாக கொண்ட இந்த நிகழ்ச்சியில் 182 சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் பங்குபற்றினார்கள். இந்த நிகழ்வில் மகளிர், சிறுவர் மற்றும் உலர் வலய அபிவிருத்தி அமைச்சர் கௌரவ. சந்ராணி பண்டார அவர்களும் பங்குபற்றினார்கள். பின்வரும் தலைப்புகளில் விரிவுரைகள் இடம்பெற்றன.

| | விரிவுரைத் தலைப்பு | வளவாளரின் பெயர் | பங்குபற்றிய SME எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் (EDB) கடமைகள் மற்றும் செயற்பாடுகள், ஏற்றுமதி சந்தை வாய்ப்புகள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் முகங்கொடுக்கும் சிக்கல்கள். | உதவி பணிப்பாளர், ஏற்றுமதி அபிவிருத்தி சபை | 182 |
| 2 | மத்திய வங்கி மற்றும் அரசினால் அமுல்படுத்தப்படும் கடன் வசதிகள், நிதிசார் அறிவு | மத்திய வங்கி, அனுராதபுர கிளை | |
| 3 | புதிய சந்தைப்படுத்தல் முறைகள் (இ- சந்தைப்படுத்தல்) | ஸ்ரீலங்கா ரெலிகொம் | |






## 5.3 விரிவுரை தொடர்கள் -2019

தரமான அரச சேவையை உருவாக்குவதற்காக அரச துறை ஊழியர்களின் தரம் மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நோக்குடன் இந்த ஆண்டில் விஷேட தொடர் விரிவுரைகள் நடத்தப்பட்டன. அரச துறை ஊழியர்களின் திறமைகளை வெளிப்படுத்துவதற்காக பல்வேறு மட்ட அரச அலுவலர்களுக்கான இந்த தொடர் விரிவுரைகள் தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் தவிசாளர் திரு. தினேஸ் வீரக்கொடி அவர்களது எண்ணக்கருவுக்கு அமைய 2016 அண்டில் ஆரம்பிக்கப்பட்டன.

கொழும்பிலும், கொழும்புக்கு வெளியிலும் உள்ள பொதுத் துறை ஊழியர்களின் தரம் மற்றும் உற்பத்தித்திறனை அபிவிருத்தி செய்வதற்காக பல்வேறு துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் திறமையான விரிவுரையாளர் குழு ஊடாக வினைத்திறனான தொடர் விரிவுரைகளை நடத்துதல் தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் குறிக்கோளாகும்.

**2019 அண்டில் நடத்தப்பட்ட விரிவுரைகளின் சாராம்சம் கீழே தரப்பட்டுள்ளது.**

| விரிவுரைத் தலைப்பு | வளவாளரின் பெயர் | திகதி / இடம் | பங்குபற்றியோர் எண்ணிக்கை | ஒழுங்கமைப்பு செய்த நிறுவனம் |
|---|---|---|---|---|
| பொதுத் துறை ஊழியர்களின் வினைத்திறனை அதிகரித்தல் | திரு. கிஷோ ஹோமஸ் | 14.05.2019 SLITHM | 100 | NHRDC |
| பொதுத் துறை ஊழியர்களின் வகிபாகத்தை மாற்றுதல் | திரு. தம்மிக்க பெரேரா | 24.09.2019 SLITHM | 200 | NHRDC & வெலிபல் PLC |
| மன அழுத்தமற்ற ஊழியர் | கலாநிதி. பிரபாத் கருணாநாயக்க | 06.11.2019 HARTI | 100 | NHRDC |






**பொதுத் துறை ஊழியர்களின் வினைத்திறனை அதிகரித்தல், SLITHM**






**மன அழுத்தமற்ற ஊழியர், HARTI**






**பொதுத் துறை ஊழியர்களின் வகிபாகத்தை மாற்றுதல், SLITHM**

## 5.4 திண்ம கழிவு மகாமைத்தவ தொழில்முயற்சியாளர்களை உருவாக்குதல்

இலங்கையின் கழிவு முகாமைத்துவ துறையில் திண்மக் கழிவு முகாமைத்துவம் நெருக்கடியான பிரச்சினையாகும். இந்த துறையில் ஈடுபட்டுள்ள தொழில்முயற்சியாளர்களின் ஆற்றலை விருத்தி செய்வதற்காக மாகாண சபைகள் அமைச்சின் திண்ம கழிவு முகாமைத்துவ அலகு மற்றும் ஸ்ரீ ஜயவர்த்தன பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து தேசிய மனித வள அபிவிருத்தி சபை பாடத்திட்டத்தை வடிவமைத்தது. இந்த பாடநெறி ஊடாக கழிவு பிரச்சினைக்கு நீண்டகால தீர்வு காணுதல் மற்றும் இந்த துறையில் புதிய தொழில் வழிகாட்லாக தொழில்முயற்சியாளர்களை உருவாக்க எதிர்பார்க்கப்படுகிறது. இந்த பாடநெறியின் முன்னோடி நிகழ்வாக தேசிய மனித வள அபிவிருத்தி சபை 2019 ஒக்டோபர் 20 திகதி ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக தொழில்முயற்சியாண்மை திணைக்களத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

வலுவான முகாமைத்துவ திறன்கள் உள்ள தொழில்முயற்சியாளர்களை உருவாக்குவதற்காக கழிவு முகாமைத்துவ தொழில்நுட்ப பாடநெறியை கற்பதற்கான திண்ம கழிவு முகாமைத்துவ சான்றிதழ் பாடநெறிக்கான வசதிகளை வழங்குவதே இந்த பாடநெறியின் பிரதான குறிக்கோளாகும். மேலும், பாடநெறியில் பின்வரும் விஷேட குறிக்கோள்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படுகிறது,

- ❖ தொழில்முயற்சி முன்னெடுப்புகளை விருத்தி செய்வதற்கான மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்துதல்.
- ❖ தற்போதுள்ள முறைசாரா வர்த்தக தொழில்முயற்சியாளர்களிடம் முறையான ஆற்றலை விருத்தி செய்தல்.
- ❖ பல்கலைக்கழகங்கள் மற்றும் TVET ஊடாக கழிவு முகாமைத்துவ தொழில்முயற்சியாளர் அபிவிருத்தி NVQ - 5 மட்ட பாடநெறியை அறிமுகப்படுத்துதல்.
- ❖ ‘‘தூய்மையான நாடு. பசுமையான சுற்றாடல்’’ எண்ணக்கருவை பிரபலப்படுத்துவதற்காக கழிவு முகாமைத்தவம் மற்றும் கட்டுப்பாட்டுக்கான புதிய தந்திரோபாயத்தை அறிமுகபப்படுத்துதல்.

மாகாண சபைகள் அமைச்சின் கழிவு முகாமைத்துவ நிலையத்தினால் இலங்கையிலுள்ள அனைத்து மாகாண சபைகளையும் உள்ளடக்கியதாக கழிவு முகாமைத்துவ பாடநெறிக்கான பயிலுனர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தத்துவார்த்த ரீதியான மற்றும் பிரயோக அமர்வுகளை வெற்றிகரமாக நிறைவு செய்யும் அனைத்து பங்குபற்றுனர்களுக்கும் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படும்.

திண்ம கழிவு முகாமைத்துவ துறையில் ஈடுபட்டுள்ள தொழில்முயற்சியாளர்களுக்கு இந்த பாடநெறி பயனுள்ளதாக இருக்கும் என்பதுடன், தொழில்முனைவு, முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான அறிவை ஆய்வு செய்து, 22 பங்குபற்றுனர்கள் இந்த பாடநெறியை பயின்று வருகின்றனர். இந்த பயிற்சியினால் அவர்கள் தமது வியாபாரத்தை மேலும் விருத்தி

செய்யலாம். பாடநெறியின் தரத்தை உயர்த்துவதற்காக TVEC இடமிருந்து NVQ - 5 மட்ட சான்றிதழ் வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.




## 5.5 தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் புள்ளிவிபர திரட்டு

தேசிய மனித வள அபிவிருத்தி சபின் நோக்குக்கு அமைய, இலங்கையின் கல்வித் துறையுடன் தொடர்புடைய தரப்பினரின் தகவல் இடைவெளியை நிரப்புவதற்காக வருடாந்த புள்ளிவிபர வெளியீட்டை வெளியிடுவதற்கு தேசிய மனித வள அபிவிருத்தி சபை தீர்மானித்துள்ளது. இது தொடர்பில் 2015 ஆண்டிலிருந்து 4 செய்தி திரட்டுக்கள் வெளியிடப்பட்டதுடன், புதிய வெளியீடு 2019 ஆண்டில் வெளியிடப்பட்டது.

இந்த செய்தி திரட்டில் பொது கல்வி, TVET மற்றும் உயர் கல்வி துறைகளுடன் தொடர்புடைய முக்கியமான புள்ளிவிபரங்கள் அடங்கியுள்ளன. இணைய தளத்திலுள்ள இரண்டாம் நிலை தரவு மூலங்கள், இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் புள்ளிவிபரங்கள் போன்றவற்றின் அடிப்படையில் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இந்த வெளியீட்டின் தரவுகள் ஆய்வாளர்கள், இலங்கையின் கல்வித் துறை தொடர்பில் அக்கறை செலுத்தும் கொள்கை வகுப்பாளர்களுக்கு முக்கியமானதாக அமையும்.

## 6.2019 ஆண்டில் தனியார் துறை பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள்

### 6.1 பொதுத் துறை அலுவலர்களுக்கான வெளிநாட்டு பயிற்சிகள் - 2019

"எமது தொழிற்படையின் எதிர்காலம் தயார்." எனும் நோக்கின் கீழ் இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை அரச அலவலர்களுக்காக 2019 ஆண்டில் மிகவும் வெற்றிகரமான பயிற்சிகளை தொடர்ச்சியாக ஏற்பாடு செய்திருந்ததுடன், அந்த ஆண்டில் பிலிப்பைன்சில் முதலாவது பயிற்சியை முன்னெடுப்பதில் தேசிய மனித வள அபிவிருத்தி சபை வெற்றி பெற்றது.
தொழில்சார் திறன்கள் மற்றும் அரச துறை அலுவலர்களின் தனிப்பட்ட விருத்தியை அதிகரித்தல் அந்த பயிற்சிகளின் பிரதான நோக்கமாகும்.

2019 ஆண்டில் பொதுத் துறை அரச அலுவலர்களுக்காக உயர்மட்ட முகாமைத்துவ அரச அலுவலர்கள் மற்றும் இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் போன்ற இலக்கு குழுக்களுக்காக மூன்று பயிற்சிகளை தேசிய மனித வள அபிவிருத்தி சபை ஏற்பாடு செய்தது. அந்த மூன்று பயிற்சிகளும் பின்வருமாறானதாகும்,

#### 6.1.1 முகாமைத்துவ திறன் அபிவிருத்தி பயிற்சி (MCDP)

மத்திய மற்றும் உயர் மட்ட பொதுத் துறை முகாமைத்துவ அலுவலர்களை இந்த பயிற்சி இலக்காக கொண்டதாகும். மூன்று நாள் உள்ளூர் அமர்வுகளுடன் அனைத்து பயிற்சிகளும் நடத்தப்பட்டன. திரு. ரனில் சுகததாஸ, கலாநிதி ஹசுன் நந்தபால மற்றும் திரு. சமீர உதாவத்த ஆகியோர் உள்ளூர் வளவாளர்களாக கலந்துகொண்டனர். அந்த மூன்று பயிற்சிகளினதும் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**முகாமைத்துவ திறன் அபிவிருத்தி பயிற்சி (MCDP) III**

பங்குபற்றியோர் எண்ணிக்கை – 27
பயிற்சியின் உள்ளூர் அமர்வுகள் பெப்ரவரி 27 ஆம் திகதியிலிருந்து மார்ச் 01 ஆம் திகதி வரை நடைபெற்றது. வெளிநாட்டு அமர்வுகள் மார்ச் 10 ஆம் திகதியிலிருந்து மார்ச் 16 ஆம் திகதி வரை நடைபெற்றது.
நாடுகள் : மலேசியா மற்றும் சிங்கப்பூர்





### 6.1.2. இவங்கை மின்சார சபை அலுவலர்களுக்கான வெளிநாட்டு பயிற்சி

பயிற்சியின் குறிக்கோள் : இலங்கை மின்சார சபையின் தகவல் தொழில்நுட்ப செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு செயற்பாடுகளை மேம்படுத்துதல்.

- ❖ பங்குபற்றியோர் எண்ணிக்கை – 10
- ❖ பயிற்சி திகதிகள்: 2019 ஜனவரி 30 ஆம் திகதியிலிருந்து பெப்ரவரி 05 ஆம் திகதி வரை
- ❖ இலக்கு குழு : இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள்
- ❖ நாடு : மலேசியா






### 6.1.3. தலைமைத்துவ மற்றும் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி

- ❖ இலக்கு குழு : பொதுத் துறை உயர் மட்ட முகாமைத்துவ அலுவலர்கள்
- ❖ பங்குபற்றியோர் - 16
- ❖ நாடு : பிலிப்பைன்ஸ்





## 6.2 தொழிலற்ற காலத்தில் கரையோர மீனவ குடும்பங்களை வினைத்திறனாக பயன்படுத்துதல்

சமுத்திர மீன்பிடி, உள்ளூர் மற்றும் மீன்வளர்ப்பு ஆகிய இரண்டு பிரதான மின்பிடித் துறைகள் இலங்கையில் காணப்படுகின்றன. சமுத்திர மீன்பிடி உப பிரிவில் 130,800 மினவர்கள் ஈடுபட்டுள்ளதுடன், சமுத்திர துறையின் ஒட்டுமொத்த மீன் உற்பத்தியில் 60% கரையோர மீன்பிடியில் ஈடுபட்டுள்ள மீனவர்களால் வழங்கப்படுகிறது. எஞ்சிய கரையோரத்தை தாண்டிய / ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட்டுள்ள மீனவர்களால் வழங்கப்படுகிறது. மீன்பிடியில் ஈடுபட முடியாத பருவ காலத்தில் கரையோர மீனவர்களில் பெரும்பாலானோர் பலநாள் படகுகளில் தொழிலாளர்களாக அல்லது மீன்பிடியில் ஈடுபடக்கூடிய வேறு பிரதேசங்களுக்கு புலம்பெயர்கின்றனர். சில வேளைகளில் அவர்கள் கருவாடு உற்பத்தி உள்ளிட்ட மீன்பிடித் துறை சார்ந்த தொழில்களில் ஈடுபட்டு சம்பளம் பெறுகின்றனர். எனவே, மீன்பிடி பருவமற்ற காலத்தில் கரையோர மீனவ குடும்பங்களை வினைத்திறனாக பயன்படுத்துவது அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் நன்மையளிக்கும்.
மேற்குறித்த பிரச்சினையை கையாழுதல் : இலங்கையின் கரையோர பிரதேச மீனவ குடும்பங்களை வினைத்திறனாக பயன்படுத்தும் நோக்குடன் பின்வரும் செயற்திட்டங்கள் நடத்தப்பட்டன.

**இலக்கு குழு கலந்துரையாடல் (FGD)**

புத்தளம் மாவட்டத்திலுள்ள உடப்பு மற்றும் கண்டல்குழி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இரண்டு இலக்கு குழு கலந்துரையாடல்கள் 2019 மார்ச் 18 ஆம் திகதி நடத்தப்பட்டதுடன், ஒரு இலக்கு குழு கலந்துரையாடல் 2019 ஜூன் 23 ஆம் திகதி அம்பாந்தோட்டை மாவட்டத்திலும், ஒரு இலக்கு குழு கலந்துரையாடல் 2019 ஒக்டோபர் 04 ஆம் திகதி அம்பாறை மாவட்டத்திலும் நடத்தப்பட்டது. அந்த இலக்கு குழு கலந்துரையாடல்கள் மூலம் மீனவ குடும்பங்களின் பிரதான பிரச்சினைகள் மற்றும் அவர்களுக்கு தேவையான பயிற்சிகள் அடையாளம் காணப்பட்டன.

**இலக்கு குழு கலந்துரையாடல்களின் (குபுனு) சாராம்சம்**

| நிகழ்வுகளின் வகை | இடம் | மாவட்டம் | அலுவலர்கள் மற்றும் பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| இலக்கு குழு கலந்துரையாடல் | உடப்பு | புத்தளம் | 23 |
| இலக்கு குழு கலந்துரையாடல் | கண்டல்குழி | | 28 |
| இலக்கு குழு கலந்துரையாடல் | குடாவெல்ல தெற்கு | அம்பாந்தோட்டை | 10 |
| இலக்கு குழு கலந்துரையாடல் | கல்முனை | அம்பாறை | 15 |

**FGD - உடப்பு**









**விழிப்புணர்வு கருத்தரங்குகள்**

“சிறிய, நடுத்தர தொழில்முயற்சியாளர்களின் வாய்ப்புகள் மற்றும் வியாபாரத்த ஆரம்பித்தல் எவ்வாறு என்பது தொடர்பான அறிவு” தொடர்பான இரண்டு விழிப்புணர்வு கருத்தரங்குகள் புத்தளம் மாவட்டத்திலுள்ள கற்பிட்டி மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள தங்காலை ஆகிய இடங்களில் DFAR, கைத்தொழில் அபிவிருத்தி சபை, மத்திய வங்கி, “மஹிமா” தாவர நாற்றுமேடை நிறுவனம் மற்றும் SIYB அமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து 2019 ஜூலை 12, 2019 நவம்பர் 26 ஆகிய திகதிகளில் நடத்தப்பட்டன. மேற்கொள்ளக்கூடிய சுயதொழில்கள் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி வாய்ப்புகள், நிதிசார் அறிவு போன்றவை மேற்குறித்த பொதுவான தெளிவூட்டல் நிகழ்ச்சிகள் ஊடாக வழங்கப்பட்டதுடன், அவர்களது விஷேட பயிற்சி தேவைகளும் இனங்காணப்பட்டன.

**தெளிவூட்டல் நிகழ்ச்சிகளின் சாராம்சம்**

| **நிகழ்வுகளின் வகை** | **இடம்** | **மாவட்டம்** | **அலுவலர்கள் மற்றும் பங்குபற்றியோர் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| தெளிவூட்டல் | பிரதேச செயலகம் கற்பிட்டி | புத்தளம் | 348 (**அலுவலர்கள் இன்றி**) |
| தெளிவூட்டல் | பிரதேச செயலகம் தங்காலை | அம்பாந்தோட்டை | 104 (**அலுவலர்கள் இன்றி**) |

**கற்பிட்டி பிரதேச செயலகத்தில் மீனவ சமூகத்தினருக்கான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சி மேம்படுத்தல் கருத்தரங்கு**





**தங்காலை பிரதேச செயலகத்தில் மீனவ சமூகத்தினருக்கான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சி மேம்படுத்தல் கருத்தரங்கு**





**பயிற்சிகளை நடத்துதல் :**

கற்பிட்டி மீனவ சமூக பெண்களுக்கு மிகவும் பொருத்தமான பயிற்சி தேவை இனங்காணப்பட்டதன் அடிப்படையில் 110 மீனவ சமூக பெண்களுக்கான ''கற்றாளை பயிர்ச்செய்கை'' தொடர்பான பயிற்சி இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் அனுசரணையுடன் 2019 ஒக்டோபர் 18 ஆம் திகதி கற்பிட்டி பிரதேச செயலகத்தில் வெற்றிகரமாக நடத்தப்பட்டன.

**பயிற்சிகளை நடத்துதல -''கற்றாளை பயிர்ச்செய்கை'' பிரதேச செயலகம் கற்பிட்டி**





## 6.3 பாடசாலைகளில் தொழில் வழிகாட்டலை பலப்படுத்துவதற்கான ஆற்றல் விருத்தி நிகழ்ச்சிகள்

மாணவர்களுடன் தொழில் வழிகாட்டல் தொடர்பான கலந்துரையாடல் மேற்கொள்ள வேண்டிய முறை தொடர்பில் ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் நோக்குடன் கல்வி அமைச்சுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு. இந்த கருத்தரங்கின் மூலம் தொழில் வழிகாட்டல் தொடர்பான ஆழமான அறிவுமிக்க நிபுணர்களின் ஆலோசனை மற்றும் தொழில் வழிகாட்டலுக்கான பிரயோக ரீதியான வழிகாட்டல் தொடர்பான மிகவும் விஷேடமான ஆலோசனை வழங்கப்பட்டது. விரிவுரை நடத்துவதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு ஊடாக விரிவுரையாளர்கள் குழாம் தெரிவு செய்யப்பட்டது.

- தொழில் வழிகாட்டலில் ஆசிரியரின் வகிபாகம்
- சைக்கோமெற்றிக் மற்றும் தொழில் பரீட்சை
- பாடசாலை கட்டமைப்பில் தொழில் வழிகாட்டலை பலப்படுத்துதல்
- தொழில் சந்தை, தொழில் கல்வி, பயிற்சி மற்றும் சமகால பயிற்சி வாய்ப்புகள்.

நிபுணர்களை உள்ளடக்கிய வளவாளர் குழாம். அதாவது, செல்வி. சந்திமா ரொட்றிகோ- தொழில் வழிகாட்டல் அலுவலர், திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு, திரு. ஜே.டி.ரத்நாயக்க - தொழில் வழிகாட்டல் அலுவலர், ரஜரட்ட பல்கலைக்கழகம், திரு. மன்ஜுன விதானபத்திரண - பதில் பணிப்பாளர், மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு,

கலாநிதி. அஜித் ஜயவர்த்தன – பணிப்பாளர், இலங்கை தொழில் வழிகாட்டல் நிறுவனம், திரு. பி.விவேகானந்தன் - தொழில் வழிகாட்டல் போதனாசிரியர், தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையம் - கிண்ணியா, திரு. பி.டி.டப்.கே.கருணாரத்ன உதவி பணிப்பாளர் (தே.இ.சே.ம) இளைஞர் அமைப்புகள் அபிவிருத்தி மற்றும் தொழில் வழிகாட்டல் ஆலோசனை.

மேலே குறிப்பிட்ட வளவாளர்களுக்கு மேலதிகமாக, தேசிய மனித வள அபிவிரத்தி சபையின் பணிப்பாளர் கலாநிதி. கே.ஏ.லலித்ததீர ''தொழில் சந்தை, போக்குகள் மற்றும் தலைமைத்துவம்'' எனும் தலைப்பில் விரிவரை ஆற்றினார்.

கல்வி வலயங்கள் கல்வி அமைச்சினால் பெயர் குறிப்பிடப்பட்டன. முன்மொழியப்பட்ட நிகழ்வுகளுக்கு மேலதிகமாக பியகம மத்திய கல்லூரி அதிபரின் வேண்டுகோளுக்கு அமைய ஒரு மேலதிக நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

2019 ஆண்டில் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள் தொடர்பான தகவல்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகிறது.

| | **கல்வி வலயம்** | **இடம்** | **திகதி** | **பங்குபற்றிய ஆசிரியர்கள் / அதிபர்கள் / அலுவலர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| 1 | இரத்தினபுரி | குருவிற்ற கோட்ட கல்வி அலுவலகம் | 22 மார்ச் 2019 | 110 ஆசிரியர்கள் |
| 2 | வெள்ளவாய | மஹிந்த ராஜபக்ஸ மாநாட்டு மண்டபம் | 24 மே 2019 | 120 ஆசிரியர்கள் |
| 3 | பண்டாரவளை | பண்டாரவளை கல்வி வள நிலையம் | 24 ஜூலை 2019 | 110 ஆசிரியர்கள் |
| 4 | ஹொரண | ஹொரண தக்ஷிலா ஆரம்ப பாடசாலை பிரதான மண்டபம் | 9 செப்ரெம்பர் 2019 | 90 ஆசிரியர்கள் |
| 5 | அம்பாறை | டி.எஸ் சேனநாயக்கா வித்தியாலய கேட்போர்கூடம் | 4 ஒக்ரோபர் 2019 | 110 ஆசிரியர்கள் |
| 6 | கடுகஸ்தோட்டை | நுகவெல (ஆரம்ப) மத்திய கல்லூரி பிரதான மண்டபம் | 15 ஒக்ரோபர் 2019 | 100 ஆசிரியர்கள் |
| 7 | பியகம மத்திய கல்லூரி | பியகம மத்திய கல்லூரி பிரதான மண்டபம் | 15 ஜூன் 2019 | 115 ஆசிரியர்கள் |
| | **பங்குபற்றியோர் மொத்தம்** | | | **755** |

இந்த நிகழ்ச்சியை பாடசாலை மட்டத்தில் ஏற்பாடு செய்வதன் மூலம் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் நன்மை கிடைக்கும் என்பதனாலும், அனைத்து விரிவுரைகளும் பயனுள்ளதாக

இருப்பதாக தாம் அவதானித்ததன் அடிப்படையிலும் பெரும்பாலான ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்தார்கள்.

பங்குபற்றியோரின் கருத்துக்கள், பின்னூட்டல்கள் மற்றும் தேசிய மனித வள அபிவிருத்தி சபை குழுவின் அவதானிப்பின் அடிப்படையில், பாடசாலை கட்டமைப்பில் தொழில் வழிகாட்டலை பலப்படுத்துவதற்காக பின்வரும் விதந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

❖ நாடு முழுவதும் தேசிய திட்டத்தை அமுல்படுத்தவதற்காக அமைச்சின் தொழில் வழிகாட்டல் பிரிவை பலப்படுத்ததல் அத்தியாவசிய தேவையாகும்.
❖ கல்வி வலயத்தின் அனைத்து பாடசாலைகளிலும் தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை சேவையை பெறுவதற்காக வலய / பாடசாலை ரீதியில் குழுக்கள் நிறுவப்பட வேண்டுமென விதந்துரைக்கப்படுகிறது. குழுவில் பின்வரும் அலுவலர்கள் உள்ளடக்கப்பட வேண்டும்.
    ➢ மனித வள அபிவிருத்தி அலவலர்கள் (பிரதேச செயலகம்).
    ➢ திறன் விருத்தி அலவலர்கள்.
    ➢ ஆசிரிய ஆலோசனை நிலையங்களை பிரதிநிதித்தவப்படுத்தும் தொழில் வழிகாட்டல் ஆசிரியர்கள்.
    ➢ பயிற்சி நிறுவனங்களின் தொழில் வழிகாட்டல் அலுவலர்கள் (VTA, NAITA, DTET, NYSC)

❖ மாணவர்களின் தொழில் மற்றும் தொழில் தெரிவுகளில் தொழில் வழிகாட்டலை அதிகரிப்பதற்காக அனைத்து பாடசாலைகளிலும் தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை அமர்வுகள் நடத்தும் வசதிகள் இருக்க வேண்டும்.
❖ வழிகாட்டல் தலைவர்களை பாடசாலைகள் கொண்டிருக்க வேண்டும். (அதிபர், உப அதிபர் அல்லது வினைத்திறனான ஆசிரியராக இருக்கலாம்.)
❖ ஆண்டு 9 மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் தொழில் வழிகாட்டல் பரீட்சை நடத்தப்பட்டு, அது தொடர்பான பதிவுகளை அவர்கள் வைத்திருக்க வேண்டும்.
❖ அனைத்து கல்வி பிரிவுகளையும் உள்ளடக்கியதாக ஆசிரியர்களுக்கான தொழில் வழிகாட்டல் தெளிவூட்டல் மற்றும் ஊக்குவித்தல் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய விதந்துரைக்கப்படுகிறது. (அனைத்து பாடசாலைகளிலும் அதிபருடன் இரண்டு / மூன்று ஆசிரியர்கள் பங்குபற்ற வேண்டும்.)
❖ தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் விதந்துரைகளுக்கு மேலதிகமாக, கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை மேற்கொள்வது கட்டாயமானதாகும்.
❖ வலய கல்வி அலுவலர்கள் சிறந்த தொழில் வழிகாட்டல் கண்காணிப்பு முறைமையை பேண வேண்டும்.
❖ அனைத்து பாடசாலைகளிலும் முறையான தொழில் வழிகாட்டல் அலகு நிறுவப்படுதல் அத்தியாவசியமானது என்பதுடன், தொடர்புடைய கட்புல பொருட்கள் மற்றும் தொழில்

தகவல் புத்தகங்கள், கையேடுகள் மற்றும் வழிகாட்டல் திறன்கள் அடங்கிய புத்தக சேரிப்புகளை அது கொண்டிருக்க வேண்டும்.

- ❖ அனைத்து அலகுகளிலும் தரம் 9 மற்றும் அதற்கு மேற்பட்ட மாணவர்களுக்கான தொழில் பரீட்சை நடத்துவதற்கு தேவையான தகவல் தொழில்நுட்ப மற்றும் ஏனைய வசதிகள் இருத்தல் வேண்டும்.
- ❖ தொழில் வழிகாட்டலை வலுப்படுத்தவதற்கு பொருத்தமான சூழல் பாடசாலையில் இருத்தல் வேண்டும். பாடசாலையின் அனைத்து துறைகளுக்கும் தொழில் வழிகாட்டல் தொடர்பான ஊக்கப்படுத்தும் சுவரொட்டிகள் மற்றும் பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.



**පාසල් වෘත්තීය මාර්ගෝපදේශනය ශක්තිමත් කිරීමේ වැඩසටහනක්**

"පාසල් වෘත්තීය මාර්ගෝපදේශනය ශක්තිමත් කිරීම" යන තේමාව පදනම් කර ගනිමින් ජාතික ප්‍රතිපත්ති හා ආර්ථික කටයුතු අමාත්‍යාංශයේ මානව සම්පත් සංවර්ධනය කිරීමේ ශ්‍රී ලංකා ජාතික සභාව, අධ්‍යාපන අමාත්‍යාංශය සමග ඒකාබද්ධව පාසල් වෘත්තීය මාර්ගෝපදේශනය ශක්තිමත් කිරීමේ ව්‍යාපෘතියක් ක්‍රියාත්මක කරනු ලබන අතර, එහි 2019 ප්‍රථම පියවර ලෙස පාසලේ ගුරුවරුන් දැනුවත් කිරීම සහ වෘත්තීය අධ්‍යාපනය පිළිබඳ දැනුවත් කිරීමේ වැඩසටහනක් 2019 මාර්තු මස 22 දින කුරුවිට අධ්‍යාපන කොට්ඨාස කාර්යාලයේදී සාර්ථක ලෙස පවත්වන ලදී. රත්නපුර අධ්‍යාපන කොට්ඨාශයේ ගුරුවරුන් 110ක් පමණ මෙම වැඩසටහනට සහභාගී වූහ.

එම වැඩසටහන සඳහා නිපුණතා සංවර්ධන හා වෘත්තීය පුහුණු අමාත්‍යාංශයේ වෘත්තීය පුහුණු නිලධාරිනී, චන්ද්‍රිමා රොද්‍රිගෝ මහත්මිය, රජරට විශ්ව විද්‍යාලයේ වෘත්තීය මාර්ගෝපදේශන උපදේශක ජේ ඩී රත්නායක මහතා, කැලණිය විශ්ව විද්‍යාලයේ බාහිර කථිකාචාර්ය තුෂාන් ගයත්‍රු පෙරේරා මහතා සහ මානව සම්පත් සංවර්ධනය කිරීමේ ශ්‍රී ලංකා ජාතික සභාවේ අධ්‍යක්ෂක ආචාර්ය කේ ඒ ලලිතධීර මහතා ඇතුළු විද්වත් දේශක මඩුල්ලක් සහභාගී විය.

ඉතා සාර්ථක ලෙස පවත්වනු ලැබූ මෙම වැඩමුළුව පිළිබඳව ගුරුවරුන් ඉතා යහපත් ප්‍රතිචාර දැක්වූ අතර මෙවැනි වැඩසටහන් මාලාවක් ඉදිරියේදී දිවයිනපුරා පිහිටි තෝරාගත් පාසල්වල පැවැත්වීමට මානව සම්පත් සංවර්ධනය කිරීමේ ශ්‍රී ලංකා ජාතික සභාව කටයුතු සංවිධානය කරමින් සිටී.



**පාසල් වෘත්තීය මාර්ගෝපදේශන වැඩසටහන**



## 6.4 ‘ரெக்கியா அருண’ தொழில் வழிகாட்டல் சந்தை மற்றும் தொழில் வழிகாட்டல் ஊக்கப்படுத்தல் நிகழ்ச்சிகள்

முக்கியமாக வளர்ச்சியடைந்து வரும் கைத்தொழில்களுக்காக புதிய திறன்களை கவருவதற்காக பயிற்சிபெற்ற மற்றும் பயிற்சிபெறாத இளைஞர், யுவதிகளை இலக்காக கொண்டு “ரெக்கியா அருண” நிகழ்ச்சி நடத்தப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் 47% மாணவர்கள் பொதுவான கல்வி மற்றும் மூன்றாம் நிலை கல்வி ஆணைக்குழு பாடநெறிகளிலிருந்து வெளியேறுகிறார்கள். அவ்வாறு விலகும் மாணவர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் தொழிலுக்கான புலம்பெயர்வு, முச்சக்கர வண்டி செலுத்துதல் உள்ளிட்ட பயிற்றப்படாத தொழிற்படையில் நுழைகின்றனர். மனித வள உயர்மட்ட மாநாடுகள், தொழில்த்துறை மன்றங்கள், கொள்கை அபிவிருத்தி மற்றும் தொழில் கண்காட்சிகள் மற்றும் தொழில் ஊக்குவித்தல் நிகழ்ச்சிகள் போன்ற தீர்வுகள் மூலம் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக தேசிய மனித வள அபிவிருத்தி சபை வருடாந்த திட்டங்கள் ஊடாக நடவடிக்கை மேற்கொண்டது. திறன்களை உருவாக்குதல், தொழில்களை தேடுதல் மற்றும் தொழில் தேடும் இளைஞர்களை தொழில் சந்தையில் நுழையச் செய்வதற்காக அரச மற்றும் தனியார் துறையினரின் ஒத்துழைப்புடன் தொழில் சந்தைகள் மற்றும் தொழில் ஊக்குவித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டன.

கம்பனிகள், பயிற்சி வழங்குனர்கள் மற்றும் தொழில் தேடுவோருக்கு இடையிலான தகவல் பரிமாற்றம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. அது ஒரே இடத்தில் பல்வேறு கம்பனிகளில் தொழில் வாய்ப்புகளை தேடுவதற்கான முறையாகும். வரையறுக்கப்பட்ட பயிற்சிகள், வேலைவாய்ப்பு மற்றும் தொழில்வாய்ப்பு தகவல்களை இளைஞர்கள் அணுகுவதற்காக இந்த தொழில் கண்காட்சிகள் ஏற்பாடு செய்யப்படுவதுடன், இளைஞர்களுக்கும், கூட்டாண்மை நிறுவனங்களுக்கும் இடையில் உறவை கட்டியெழுப்புவதற்கும் வாய்ப்பு வழங்கப்படுகிறது.

**குறிக்கோள் :**

1. கைத்தொழில்கள்/கம்பனிகளில் உள்ள தொழில் வாய்ப்புகள் தொடர்பான தெளிவூட்டல் பிரச்சாரத்தை ஏற்பாடு செய்தல், அரச மற்றும் தனியார் துறை பயிற்சி நிறுவனங்களில் உள்ள திறன் பயிற்சி பாடநெறிகள் தொடர்பாக தெளிவுபடுத்தல் மற்றும் தொழில் கண்காட்சியை நடத்துதல்.
2. தொழில் வழங்குனர்கள் தம்மை இளைஞர்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கான வாய்ப்பு வழங்குதல்.
3. தொழில் வாய்ப்புக்கள் தொடர்பில் வேலையற்ற இளைஞர்களுக்கு அறிவூட்டுதல்.
4. தொழில் வழங்குனர்கள் மற்றும் தொழில் தேடுபவர்களுக்கு இடையிலான இணைப்பு தளத்தை வழங்குதல்.

இந்த நிகழ்ச்சிகள் TVEC, கல்வி அமைச்சு, மனிதவலு மற்றும் தொழில்வாய்ப்பு அமைச்சு, இலங்கை தொழில் வழங்குனர்கள் சம்மேளனம், வர்த்தக சம்மேளனம், மாவட்ட செயலகங்கள் மற்றும் பல்வேறு பின்னணியிலான தொழில்துறை பிரதிநிதிகளான துணிகள் மற்றும் ஆடைகள், தானியங்கி வாகனங்கள், ஹோட்டல்கள் மற்றும் சுற்றுலாத்துறை, தகவல், தொடர்பாடல்

தொழில்நுட்பம், நிர்மாணத்துறை, உணவு தொழில்நுட்பம் மற்றும் இலத்திரனியல், தொலைத்தொடர்பாடல் பொறியியல் போன்ற பல பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டன.

**நிகழ்ச்சித்திட்டத்தின் அடைவு**

பின்வரும் மாவட்டங்களில் நடத்தப்பட்ட தொழில் ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் மற்றும் தொழில் கண்காட்சிகளில் 6550 நபர்களுக்கு கூடுதலானோர் பங்குபற்றினார்கள். அந்த நிகழ்வுகளில் 20 க்கு கூடுதலான கம்பனிகள் மற்றும் 18 பயிற்சி நிறுவனங்கள் பங்குபற்றியிருந்தன.

இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம், தேசிய வர்த்தக சம்மேளனம், பெரெண்டினா, அவுஸ்ரேலியன் எய்ட், மனிதவலு திணைக்களம், மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு ஆகியோர் இந்த நிகழ்ச்சிகளின் பங்குதாரர்கள் ஆவர்.

**தொழில் சந்தை நிகழ்வகளின் சாராம்சம் :**

| இல | மாவட்டம் / பல்கலைக்கழகம் | பங்குபற்றியோர் எண்ணிக்கை | பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை | தொழில் பெற்றோர் எண்ணிக்கை | தொழில் பரீட்சை | பங்குபற்றிய கம்பனிகள் / பயிற்சி நிறுவனங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | கிழக்கு பல்கலைக்கழகம் | 2000 | 586 | 42 | 320 | 38 |
| 2 | றுஹுணு பல்கலைக்கழகம் | 1500 | 337 | 525 | 270 | 42 |
| 3 | களுத்துறை | 1300 | 256 | 198 | 160 | 63 |
| 4 | சப்ரகமுவ பல்கலைக்கழகம் | 1100 | 232 | 229 | 310 | 15 |
| 5 | காலி | 650 | 129 | - | - | 07 |
| | **மொத்தம்** | **6550** | **1536** | **994** | **1060** | **165** |

**அடையப்பட்ட குறிக்கோள் :**

- தொழில் சந்தையை நோக்கி மாணவர்கள் மற்றும் இளைஞர்களை திருப்புதல்.
- எதிர்பார்ப்புடைய மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் எதிர்பார்ப்புடைய தொழில் வழங்குனர்களுக்கும் இடையிலான தொடர்பாடல் வலையமைப்பை ஆரம்பித்தல்.
- மாணவர்களும், இளைஞர்களும் உண்மையான நேர்முகப் பரீட்சை அனுபவத்தை பெறுவதற்கு வாய்ப்பளித்தல்.
